## கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபை – 2016

---

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 01

(i) கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் நிதிகளில் நிர்வாகச் செலவினை ஏற்படுத்துவதற்காக விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 365,724,524 தொகையான கடன் மற்றும் 2010 இல் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஓய்வூதிய திட்டங்களிற்கு 2011 இல் வழங்கப்பட்ட முறையே ரூபா 85,512,906 மற்றும் ரூபா 21,842,502 தொகையான கடன்கள் 12 மாதங்கள் காலப்பகுதியினுள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும், இது நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ii) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நெற்பயிர்ச்செய்கையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் நிதியத்திற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 100,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தபோதிலும், கணக்குகளுக்கு குறிப்புக்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நடைமுறையல்லாச் சொத்தின் பயன்தரு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன், ரூபா 20,999,567 கிரயமான 14 மோட்டார், வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடுவதற்கு பதிலாக மேலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

நியமத்தின் 17, 18 மற்றும் 19 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டப்பட்ட விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மீனவர்கள் ஓய்வூதியத் திட்டத்தினூடான தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மீதான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

மீளாய்வாண்டின்போது விவசாயிகள் இறப்பு மானிய நிதியத்திற்கு ரூபா 14,907,330 தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உண்மையான விவசாய பங்களிப்பாளர்கள் மீது உண்மையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அட்டுறுச் செலவீனம் ரூபபா 3,950,634 ஆக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் மாதிரி அடிப்படையில் கொடுப்பனவு பற்றுச்சீட்டினை பரீட்சிக்கையில் இது ரூபா 4,118,005 ஆகவிருந்தது. அதற்கிணங்க அட்டுறு செலவினம் ரூபா 167,371 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) விவசாயிகள் ஓய்வூதியத் திட்டம் மற்றும் மீனவர்கள் ஓய்வூதிய திட்டம் போன்றவற்றை கணக்காய்வு செய்வதற்காக ரூபா 925,074 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் கணக்காய்வுக் கட்டணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதால் செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணம் அதேதொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) பட்டியலின் பிரகாரமுள்ள ரூபா 55,700 மீதியான எரிபொருள் முற்பணங்கள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ரூபா 95,920 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததால் அத்தகைய நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 40,220 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் செலுத்தப்பட்ட நஷ்டஈடு தொடர்பில் 10 சதவீதத்தைத் திட்டத்தின் செயற்பாட்டுச் செலவீனமாக பெறுவதற்கு வழங்கப்பட்ட அனுமதி மீது ரூபா 16,693,960 நஷ்டஈடு தொடர்பில் 10 சதவீத செயற்பாட்டுச் செலவீனம் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 12 இலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. திட்டத்தின் வருமானமாக ரூபா 1,669,396 தொகை கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகையால், ஆண்டின் மிகை அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 10,839,821 பெறுமதியான வருமதியான காப்புறுதத் தவணைப்பணம் மற்றும் ரூபா 165,130 பெறுமதியான செலுத்தவேண்டிய ஏனைய கடன்கொடுத்தோர்களின் ஸ்தாபித்தலிற்கான பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 676,104 கூட்டுத்தொகையான ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் அறவிடப்படாமல் 05 தொடக்கம் 25 வருடங்கள் காலப்பகுதிக்கு மேலாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. இத்தகைய கடன் மீதிகளை ஊழியர்களின் மானிய அல்லது உத்தரவாதமளிப்பவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 708,347 மொத்தமான பெறவேண்டிய வீதி 05 வருடங்கள் தொடக்கம் 12 வருடங்களிற்கு மேலாக தீர்க்கப்படாமல் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தால் விவசாயிகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புக்களின் அறவீட்டில், காப்புறுதி காலப்பகுதிக்காக ரூபா 30 காப்புறுதி தவணைப்பணம் சேகரிக்கப்பட்டு கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும் அதற்கேற்றவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால், ரூபா 176,242,010 கூட்டுத்தொகையான காப்புறுதி தவணைப்பணம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வருமதியாகவிருந்ததுடன் அதேநேரம், திட்டத்தித்திற்கான தொகையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் என அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 371 | (i) அதிகூடிய செயல் நிமித்த கட்டுநிதி ரூபா 100,000 ஆக இருந்தபோதிலும், ரூபா 140,000 தொடக்கம் ரூபா 198,000 வரையிலான வீச்சிலான முற்பணங்கள் 06 சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிடப்பட்ட எல்லை தொடர்பாக வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) முற்பணங்களானது செலவின மதிப்பீட்டை தயாரிக்காமல் பெறப்பட்டமையால் பெறப்பட்ட முற்பணத்தில் 36 சதவீதம் தொடக்கம் 81 சதவீதம் வரை வீச்சிலான தொகையொன்று இருந்த 10 சந்தர்ப்பத்தில் 10 தொடக்கம் 28 நாட்கள் வரையிலான வீச்சில் விளைவற்றிருந்ததுடன் அதற்குப் பிறகு தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2010 மார்ச் 30 ஆந் திகதிய DMS/34(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக நாளொன்றுக்கு ரூபா 2,500 அதிகூடியதாக ஜீவனப் படியாக 2009 திசெம்பர் 29 இல் நடைபெற்ற 414 வது இயக்குனர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மீது கள கடமைகளில் ஈடுபட்டுள்ள உதவி/ பிரதி இயக்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான திட்டத்தின் செயற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 8,768,542 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 355,825,300 மிகையை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 347,056,758 முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. கெதட அருண உரமானிய நிகழ்ச்சித்திட்டத்தின் நஷ்டஈடு ரூபா 749,885,081 ஆல் குறைவடைந்தமை மற்றும் ரூபா 26,609,567 ஆல் முறையே முதலீட்டு வருமானம் அதிகரித்தமையே நிதிசார் விளைவுகளின் மேற்கூறப்பட்ட முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டில் பற்றாக்குறையும் ஏனைய ஆண்டுகளில் நிதி மிகைகளும் விளைவிக்கப்பட்டிருந்தது. ஊழியர் மிகையூதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வை கருத்திற்கொள்ளும் போது 2012 இல் ரூபா 30,411,337 தொகையான திட்டத்தின் பங்களிப்பு 2013 இல் ரூபா 25,696,859 எதிர்மறை பெறுமதிாகவிருந்தது. ஆகையால் 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 442,624,561 வரை அதிகரிப்பு தொடர்ச்சியான அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தோட்டவளர்ப்பு பயிர்கள், மருத்துவ பயிர்கள், மீன்பிடி, வனவியல் மற்றும் கால்நடை, விவசாய உபகரணங்கள் என்பவற்றிற்கான காப்புறுதியை வழங்குவதும் விவசாய மற்றும் தோட்டவளர்ப்பு உற்பத்திகள் மற்றும் மருத்துவ பயிர்களின் உற்பத்திகள், மீன்பிடி மற்றும் வனவியல் உற்பத்திகள் என்பவற்றைக் களஞ்சியப்படுத்திப் பாதுகாப்பதும் விவசாயிகளுக்கு மருத்துவ நன்மைகள் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களை வழங்குவதும் சபையின் பிரதான குறிக்கோள்களாகவுள்ளன.

இத்தகைய நோக்கங்களை அடைதலின் மீது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்**

(i) கால் நடைகள், நடைகள், விவசாய உபகரணம், சுவதேச மற்றும் மூன்றாம் தரப்பு காப்புறுதி திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகளின் அடைதலானதும் 50 சதத்தை விட குறைவாகவிருந்தது.

(ii) கடற்றொழில் மற்றும் வனவியல் உற்பத்திகளிற்கான காப்புறுதித் திட்டங்களின் ஸ்தாபித்தலினூடாக விவசாயிகளுக்கு நன்மைகளை வழங்குவதில் கவனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) புதிய போட்டி காப்புறுதி திட்டங்களின் தேவைப்பாடுகளை இனங்காணல் மற்றும் புதிய காப்புறுதித் திட்டங்களின் அமுலாக்கல் மீது கவனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) வர்த்தக வங்கிகளால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் திட்டங்களை படிப்பதனால் மிகவும் வினைத்திறனான காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுவதற்கும் விவசாயிகள் காப்புறுதித் திட்டங்களில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) விவசாயப்பொருட்களின் நிலைபெறுந்தன்மையை களஞ்சியத்தை காப்புறுதி செய்வதன் மூலம் உறுதிப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது 275 களஞ்சியங்களை காப்புறுதி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டபோது, 1 களஞ்சியம் மாத்திரம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. ஆகையால், நிறுவனத்தால் வழங்கப்படவேண்டுமென வேண்டப்பட்ட சேவை முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) மூன்றாம் தரப்பு காப்புறுதித் திட்டங்கள்

விவசாயிகளின் மூன்றாம் தரப்பு காப்புறுதி தேவைகளை பூர்த்தி செய்வதற்கான திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நிலையத்திடமிருந்தும் ஒரு மாதத்திற்கு 50,000 ஆக ரூபா 27,950,000 இலக்கிடப்பட்ட வருமானம். அத்தகைய நிலையங்களுக்கு நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளினூடாக 559 கமநல சேவைகள் நிலையங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஆண்டிற்கான உண்மையான வருமானம் ரூபா 8,474,131 ஆகவிருந்தது. இருந்தபோதிலும், ஏனைய செயற்பாட்டுச் செலவீனம் உயர்வாக இருப்பதால் தேறிய வருமானம் ரூபா 1,957,342 ஆக இருந்தது. அதற்கிணங்க, நன்மைகளானது போதிய மட்டத்தில் இல்லாதிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நிறுவனம் தவறியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### (இ) விஷேட சோளச் செயற்திட்டம்

அனுராதபுர மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட விஷேட செயற்திட்டத்தின் ரூபா 1,350 தவணைப்பணம் ரூபா 750 ஆக திருத்தப்பட்டிருந்ததுடன், 5386 விவசாயிகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட வருமானம் பின்தங்கியிருந்ததுடன் திட்டம் வருமானத்தை மிஞ்சிய ரூபா 3,346.619 இழப்பீடு செலுத்தவேண்டியிருந்தது.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

12 பிரதேச செயலகங்களில் பழுதடைந்த மோட்டார் வாகனங்கள் இருப்பதால் தலைமை அலுவலகத்திலுள்ள ஒட்டுமொத்த வாகனங்களாக 08 வாகனங்களிருந்ததுடன் 04 சாரதிகள் மாத்திரம் அதற்காக அமர்த்தப்பட்டிருந்தனர். மேலும் இயக்குனர் சபையின் அனுமதி மீது பிரதேச அலுவலகங்களின் கடமைகளுக்காக ரூபா 30,000 மாதாந்த வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,020,000 செலுத்தப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

சூதகமற்ற காலநிலை நிலமைகளால் விவசாயிகளின் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட தீங்குகளை அறிவிப்பதற்காக விவசாய அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்ட விவசாய வேலைபடைக்கு 1918 தொலைபேசி இணைப்புக்களை பெறுவதற்கு ரூபா 1,429,977 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நிறுவனமானது 276 அழைப்புக்களை பெற்றிருந்த அதே நேரம் நிறுவனமானது நாளதுவரையாக்கப்பட்ட முறையில் அதற்காக மேற்கொள்ளப்பட்ட படிமுறைகள் மீது பதிவேடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கான அலுவலககக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டமானது கைவிடப்பட்டிருந்தமையால் 2008 யூன் 04 இல் கழிவகற்றல் கட்டணங்களாக இலங்கை காணி மீட்சி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 565,800 கொடுப்பனவு சிக்கனமற்ற செலவினமாகவிருந்தது. இது நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் மூலதன முற்பணங்களாக மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) அரச சார்பற்ற அமைப்பின் புலமைப்பரிசின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட 2016 ஏப்ரல் 16 இலிருந்து 25 வரை விவசாய நடவடிக்கைகள் மீதான மலேசியன் சுற்றுலா பயணத்தில் பங்குபற்றிய திட்டத்தின் அலுவலர்களில்லாத இரு நபர்களுக்கு 2016 யூலை 08 ஆந் திகதிய 474/13 ஆம் இலக்க இயக்குனர் சபை தீர்மானத்தின் மீது ரூபா 100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 04 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பில் காப்புறுதியிடமிருந்து ரூபா 194,604 கூட்டுத்தொகையான தொகை அறவிடப்பட முடியாதிருந்தது. 2015 திசெம்பர் 08 இல் இடம்பெற்ற வான் விபத்தால் வீதிக்கு ஏற்பட்ட சேதங்களிற்காக ரூபா 282,461 தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு போன்றவற்றின் பிரகாரம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பை கணிப்பிடுகையில் வாழ்க்கைப்படியை கருத்திற்கொள்ளாமல் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால், 2006 சனவரி தொடக்கம் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதியின் ஊழியர் மற்றும் தொழில்தருனர்களின் பங்களிப்பின் நிலுவைகள் ரூபா 29,409,723 மற்றும் ரூபா 14,704,862 தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

அம்பிலிப்பிற்றியிலுள்ள அலுவலக விடுதியொான்று தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளாமல் 30 வருடங்களுக்கு மேலாக விளைவற்றிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிறுவனத்தில் 424 அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளிலிருந்ததுடன் அதில் 12 பதவிகளின் 113 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எதிர்கால மனித வளங்கள் தேவைகளை கருத்திற்கொள்வதன் மூலம் 2015 யூலை 30 இல் திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்தலின் திருத்தப்பட்ட திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உரிய அனுமதியைப் பெறுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2017 மே 30 இலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம், உதவி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) நிரந்தரப்பதவிக்காக வேண்டப்பட்ட தகமைகளாக பட்டமொன்றை கொண்டிருத்தலும் வயதானது 25 வருடத்தை விட குறையாமலும் 45 வயதை விட அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். இருந்த போதிலும், 54 வயதான அலுவலரொருவர் பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிக்காமல் கா.பொ.த(சா.த) பெறுபேறுகளுடன் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் மூன்றாம் தரப்பு காப்புறுதி திட்டத்தினை அமுல்படுத்துவற்காக சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத வணிக அபிவிருத்தி முகாமையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் நான்கு அலுவல்கள் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது ரூபா 40,000 படிகள், ரூபா 35,000 வாகனப்படிகள், 250 லீற்றர்களுக்குச் சமனான எரிபொருள் படி மற்றும் மாதமொன்றிற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் 0.5 சதவீத தரகு போன்றவற்றை உள்ளடக்கி ரூபா 4,482,919 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பிஎவ்டீ/ஆர்ஈடீ/01/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1(அ) பந்திக்கு இணங்க தயாரிக்கப்பட்ட திட்டத்தின் 2014 – 2016 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட குறைபாடுகளை கருத்திற்கொள்வதற்கும் அக்குறைபாடுகளை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மனிதவள அபிவிருத்தித்திட்டமானது 5.2(சீ) பந்தியில் வேண்டப்பட்டவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களிற்கிடையில் 23 சதவீதம் தொடக்கம் 78 சதவீதம் வரையிலான வீச்சிலான முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டமை பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

### 5.3 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2016 பெப்ரவரி 26 இல் மேற்கொள்ளப்பட்ட பொது முயற்சிகள் குழுவின் 13 வது கூட்டக் குறிப்பிற்கிணங்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2016 ஒகஸ்ட் 26 ஆந் திகதிய பீஈ/ஜஎன்/ஏஏஜபீ/சீஓபிஈ/2016 ஆம் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம், திட்டத்தின் அலுவல்கள் அவர்களுடைய குறிப்பிட்ட பதவிக்குரிய சம்பளங்கள் மற்றும் படிகளிற்கு மேலதிகமாக ஏனைய படிகளை பெறமுடியாது 2016 ஆம் ஆண்டின் கூட்டக்குறிப்புக்கு முரணாக கடற்தொழிலாளர் ஓய்வூதிய விசேட படி, விவசாயிகள் ஓய்வூதிய விசேட படி மற்றும காப்புறுதி தரகு மறறும் ஊக்குவிப்பு படியாக முறையாக ரூபா 521,928, ரூபா 772,550 மற்றும் ரூபா 9,950,591 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | **கட்டுப்பாட்டுப் பரப்பு** | **அவதானிப்பு** |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | வருமானம் அங்கீகரித்தலிலுள்ள குறைபாடுகள் |
| (ஆ) | வருமானத்தின் கட்டுப்பாடு | (i) அங்கீகரிக்கப்பட்ட முறைமையுடன் வருமானம் சேகரிப்பதிலுள்ள முறைமை இணங்காமை |
| | | (ii) வருமதி மீதிகளை அறவீடுகளிலுள்ள குறைபாடுகள் |
| (இ) | சொத்து முகாமைத்துவம் | சொத்துக்களின் குறைவான பயன்பாடு |
| (ஈ) | பதவியணி முகாமைத்துவம் | வெற்றிடங்களை நிரப்புவதில் அங்கீகரிக்கப்படாத நியமனங்கள் மற்றும் வெற்றிடங்கள் |
| (உ) | நிதிக் கட்டுப்பாடு | (i) எல்லையை மிஞ்சிய முற்பணங்களின் கொடுப்பனவு |
| | | (ii) முற்பணங்களை பெறப்பட்டதா என்பதை கருத்திற்கொள்ளாமல் முற்பணங்களை வழங்கல் தீர்க்கப்பட்டிருத்தல். |